**செய்தி வெளியீடு எண்: 323** **நாள்: 11.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (11.5.2018) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் போற்றும் மகத்தான தலைவி

அம்மா அவர்களின் ஆசியோடு

இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த சிறப்பான விழா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி கொண்டிருக்கின்ற
மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்
**திரு. கடம்பூர் ராஜு அவர்களே!**

முன்னிலை வகிக்கும்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
**திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
**திரு.செல்லூர் கே.ராஜு அவர்களே!**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறைஅமைச்சர்
**திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே!**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
**திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே!**
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
**திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களே!**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்
**டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே!**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்
**திருமதி வி.எம்.ராஜலெட்சுமி அவர்களே!**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்
**திரு.க.பாஸ்கரன் அவர்களே!**

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி
சிறப்புப் பிரதிநிதி
**திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே!**

வரவேற்புரை ஆற்றிய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர்
**திரு.என். வெங்கடேஷ் அவர்களே!**

நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர்
**திரு.எஸ்.முருகதாஸ் அவர்களே!**

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் அமைச்சர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

அரசு அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, இந்த நிகழ்ச்சியிலே நன்றியுரை ஆற்றவிருக்கின்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் திரு. எஸ்.முருகதாஸ் அவர்களே,

இந்த கூட்டுக் குடிநீர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். நீண்ட நெடிய காலமாக இந்த கோவில்பட்டி நகர மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி தண்ணீர் கிடைக்க வேண்டுமென்று கோவில்பட்டிக்கு வந்திருந்த வேளையில், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தெய்வமாக இருந்து இந்த திட்டத்திற்கு ரூபாய் 82.14 கோடி ஒதுக்கீடு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டு, இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை துவக்கி வைப்பதற்காக மரியாதைக்குரிய சகோதரர் கடம்பூர் ராஜு அவர்கள் என்னை அழைத்தார். இங்கே வந்து பார்க்கின்றபொழுது, தூத்துக்குடி மாவட்டமே இங்கே குழுமியிருக்கின்ற காட்சியை நான் பார்க்கின்றேன். இந்த கூட்டுக்குடிநீர் திட்ட துவக்க விழா ஒரு மாநாடுபோல் காட்சியளிக்கின்றது. வருகின்ற சாலையின் இருபுறங்களிலும் மக்கள் வெள்ளம், இங்கே நடைபெறுகின்ற இந்த கூட்ட அரங்கிலும் மக்கள் வெள்ளம். ஆக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எந்தளவிற்கு மக்களிடத்திலே ஆதரவு பெருகி வருகிறது என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

**‘இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு’** என்ற திருக்குறளுக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணப்படி செயல்படும் இந்த அரசு, இன்று கோவில்பட்டி நகராட்சிக்கான இரண்டாவது பைப்லைன் திட்டப்பபணிகள் துவக்கவிழாவையும், புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டுவிழாவையும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவையும் இங்கு சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறது.

‘**பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு**’ என்று பாரத நாட்டையும்

**‘செந்தமிழ் நாடென்னும் போதினிலே – இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே’** என்று தமிழ்நாட்டையும்

**‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்**

**இனிதாவது எங்கும் காணோம்**' என்று

தமிழ் மொழியையும்;

**'முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே**'

என்று தூத்துக்குடியையும்

பாடிய **தேசியக்கவி பாரதியாரை** பெற்றெடுத்து,

இந்திய வரலாற்றில் நிரந்தர இடத்தையும்

நீங்காத புகழையும் பெற்றது இந்த தூத்துக்குடி மாவட்டமாகும். அத்தகைய பெருமைமிக்க தூத்துக்குடி மாவட்டத்தில், கோவில்பட்டி நகராட்சியில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதை நான் பெருமையாக கருதுகிறேன்.

தீப்பெட்டிக்கு சிவகாசியும், பூட்டுக்கு திண்டுக்கல்லும், மாட்டுக்கு மணப்பாறையும், பட்டுக்கு காஞ்சிபுரமும், மல்லிகைக்கு மதுரையும், நெல்லுக்கு தஞ்சாவூரும், காளைக்கு காங்கேயமும், முட்டைக்கு நாமக்கல்லும், கோயிலுக்கு கும்பகோணமும், அரிசிக்கு மண்ணச்சநல்லூரும், பலாவுக்கு பண்ருட்டியும்,

அல்வாவிற்கு திருநெல்வேலியும் பெயர் பெற்றதைப் போல;

கடலை மிட்டாய்க்கு உலகப் புகழ்பெற்றது

இந்த கோவில்பட்டியாகும். காரணம், கோவில்பட்டியில் தயாரிக்கப்படும் கடலைமிட்டாய் கெட்டுப்போகாமல் இருப்பதற்கு செயற்கையான ரசாயனம் எதுவும் இங்கு கலக்கப்படுவதில்லை என்றும், இயற்கையாக விளையும் பொருட்களைக் கொண்டே தயாரிக்கப்படுவதால்தான் கோவில்பட்டி கடலைமிட்டாய் மிகவும் ருசியாக இருப்பதால் இந்த கடலை மிட்டாய்க்கு தமிழ்நாடு மட்டுமல்ல இந்திய நாட்டிலே வரவேற்பு மிகுதி என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவில்பட்டி மக்களும் கடலை மிட்டாய் போல் மிகவும் இனிமையானவர்கள், உண்மையிலும் உபசரிப்பிலும் கோவில்பட்டி மக்கள் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

உழைப்பாளர்களை அதிகம் கொண்டுள்ள கோவில்பட்டியின் மீது எனக்கு தனிப்பட்ட அன்பும் மரியாதையும் இருக்கிறது. எனவேதான், கோவில்பட்டி மக்களின் நலன் கருதி, அவர்களின் அடிப்படைத் தேவையான குடிநீருக்கு ஒரு நிரந்தர தீர்வு காணும் நோக்கத்தில் புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்ட துவக்க
விழாவிற்கு நான் நேரடியாக வந்து கலந்துக் கொண்டுள்ளேன்.

'**நீர் இன்று அமையாது உலகு**' என்ற குறளுக்கேற்ப, நீர் ஆதாரத்தைப் பெருக்குவதிலும், கிடைக்கின்ற நீரை எல்லா மக்களுக்கும் பகிர்ந்து அளிப்பதிலும், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாத அளவிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதிலும், மாண்புமிகு அம்மாவின் அரசு கவனமாக நடந்து கொள்கிறது.

1976ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கூட்டு குடிநீர்த்திட்டத்தின் மூலமாக கோவில்பட்டி நகராட்சிக்கு நாளொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த
60 லட்சம் லிட்டர் குடிநீர் இங்குள்ள மக்களுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தால்தான்,
2012ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 81 கோடியே 82 லட்சம் ரூபாய் ஒதுக்கி இந்த குடிநீர் திட்டத்திற்கு வடிவம் கொடுத்தார்கள்.

வேகமாக வளர்ந்து வரும் கோவில்பட்டி நகராட்சி, ஆண்டுக்கு ஆண்டு மக்கள் தொகை பெருகி வருவதை கருத்தில் கொண்டும், 2040ஆம் ஆண்டில் இந்நகராட்சியில் உத்தேசமான மக்கள் தொகையை கணக்கில் கொண்டும், வருங்காலத்தில் இங்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும் பட்சத்தில் தனி ஒருவருக்கு நாளொன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்க வேண்டிய தேவையை கருத்தில் கொண்டும், தொலைநோக்குப் பார்வையுடன் திட்டமிட்டும் இந்த புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தினால், கோவில்பட்டி நகராட்சியில் தற்பொழுதுள்ள மக்கள் தொகையை கணக்கில் கொண்டு நாள் ஒன்றுக்கு
100 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

இதைத்தவிர, 2.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 4 நீர் ஊற்று கிணறுகள் அமைப்பதற்கும், 15 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
27 ஆயிரத்து 846 வீட்டு குடிநீர் இணைப்புகளுக்காக பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு மக்களின் அத்தியாவசிய தேவைகளை கவனமாக கருத்தில் கொண்டுதான் மக்கள் பணியாற்றி வருகிறது. அதற்கு ஒரு உதாரணம்தான் இந்த கோவில்பட்டி நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இனிய விழாவின்மூலம் மக்களிடம் நான் அன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், வீதியோர குழாயில் வீணாக நீர் வடிந்து கொண்டிருக்கும் போது, ஒரு நொடிகூட தாமதிக்காமல் விரைந்து, அக்குழாயில் வீணாகும் நீரை நிறுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டும்.

‘**நீர் என்பது உயிருக்கு நேர்**’ என்று நாம் கருதி ஒவ்வொரு துளி நீரையும் தங்கத்திற்கு மேலாக சேமிக்க பழக வேண்டும். “**அனைத்து வளங்களுக்கும் தண்ணீர் வளம்தான் தாய்**” என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். “**ஊர் வளம் பெற**,
**நீர் வளம் காப்போம்**” என்று இந்த இனிய வேளையில் நீங்களெல்லாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், இந்த இனிய விழாவில் தூத்துக்குடி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு துறைகளின் சார்பாக 5 ஆயிரத்து 636 பேர் பயன்பெறும் வகையில் 15 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும் நான் வழங்கியுள்ளதை பெருமையாகக் கருதி மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசு நலத்திட்ட உதவிகளை பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி மேன்மேலும்

உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி எல்லா நலன்களையும் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதைப்போல, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பள்ளிக்கல்வித்துறை, தூத்துக்குடி மாநகராட்சி,

ஊரக வளர்ச்சித்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் வேளாண்மைத்துறை சார்பில் 128 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பெற்ற 129 கட்டடங்கள் என்னால் இன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக திறந்து வைக்கப்பட்டதையும் நான் பெருமையாக கருதுகின்றேன். மேலும் 47 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 144 திட்டங்களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

‘‘**மக்களால் நான், மக்களுக்காக நான்**’’
என்ற மாண்புமிகு அம்மா அவர்களின்
வேத வாக்கை பின்பற்றி
மாண்புமிகு அம்மா அவர்களின்
கனவாகவும் நினைவாகவும் மலர்ந்திருக்கின்ற
இந்த திட்டப்பணிகளை திறந்து வைத்ததில்
பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**‘ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற, நான் ஒருபோதும் தவறியதில்லை’** என

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும், மக்களுக்காக உழைக்கின்ற அரசு; மக்கள் பணியிலிருந்து ஒருநாளும் தவறாத அரசு என உறுதிப்பட கூறுகின்றேன். இதை ஒரு கதையின் மூலம் கூறினால் நன்றாக இருக்கும். ஒரு காலத்தில் ஒரு மன்னர் மக்கள் போற்றும்படி ஏழைகளுக்கு பல தர்ம காரியங்கள் செய்து ஆட்சி நடத்தி வந்தார். அதனால், அவர் சொர்க்கத்திற்கு சென்று பல ஆண்டுகள் இன்பமாக

வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் சித்திரகுப்தன் அந்த மன்னரிடம், “உனக்கு இன்றோடு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை புறப்படத் தயாராக இரு” என்று கட்டளையிட்டார். “என்னை திரும்பி பூலோகம் அனுப்ப என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று மன்னர் கேட்டார்.

‘‘நீ செய்த நல்ல காரியங்கள் மூலம் பயன் பெற்ற யாரும் பூலோகத்தில் இல்லை. ஆகவே தான், நீ பூலோகம் செல்ல வேண்டும்” என்றார் சித்திரகுப்தன்.

‘‘நான் சொர்க்கலோகத்திலேயே தொடர்ந்து இருக்க ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்’’ என்று மன்னர் சித்திரகுப்தனிடம் கேட்டார்.

அதற்கு சித்திரகுப்தன் சற்று யோசித்து விட்டு

‘மன்னா நீ பூலோகத்திற்கு போய் உனது தர்ம காரியங்களால் இன்னும் பலன்பெறும் ஒரு ஜீவனையாவது கண்டு பிடித்து கூறினால், தொடர்ந்து சொர்க்கத்தில் இருக்கலாம்’ என்றார்.

அந்த மன்னர் பூமிக்கு வந்து பார்த்து போது

அவர் வாழ்ந்த இடம் தலைகீழாக மாறி போயிருந்தது.

மக்களில் யாரையும் அவருக்கு அடையாளம் தெரியவில்லை,

தனக்கு தெரிந்தவர் யாராவது தென்படுகிறாரா? என்று மன்னர் தேடி அலைந்தார்.

அந்த ஊரிலேயே மிகவும் வயோதிகரை தேடி கண்டுபிடித்து ‘மன்னர் சந்திர சேனனை

உமக்குத் தெரியுமா?’ என்று கேட்டார்.

“எனக்குத் தெரியாது, வேண்டுமானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப்பொந்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது, அதனிடம் சென்று கேள்’’ என்றார் அந்த முதியவர்.

இரவு நேரம் வரை காத்திருந்து அந்த ஆந்தையை கண்டுபிடித்து அதனிடம் மன்னர் பேசினார். கோபத்துடன் இருந்த அந்த வயோதிக ஆந்தை, ‘‘எனக்குத் தெரியாது,

இங்கே ஒரு வயது முதிர்ந்த நாரை இருக்கிறது. அதை கேட்டுப்பார் தெரியும்,” என்றது.

ஒரு வழியாக நாரையை கண்டுபிடித்து அதனிடம், ‘‘மன்னரை தெரியுமா?’’என்று கேட்ட போது,

“எனக்கு சரியாக நினைவில்லை, ஆனால் பக்கத்து ஏரியில் என்னைவிட ஒரு வயதான ஆமை இருக்கிறது. அதனிடம் சென்று கேள்” என்று நாரை கூறிவிட்டது. மன்னர் ஏரிக்குச் சென்று ஆமையை சந்தித்து,

தன்னைப் பற்றி கேட்டார்.

அந்த ஆமையின் முகத்தில் திடீரென்று மகிழ்ச்சி தாண்டவமாடியது. “நன்றாகத் தெரியும்.

அந்த மன்னனால்தான் இந்த ஏரி இருக்கிறது.

இங்கு உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றன.

இந்த ஏரியைச் சுற்றி தோப்புகள் பசுமையாக இருக்கின்றன,

இதில் பறவைகள் உயிர் வாழ்கின்றன. இந்த ஏரி இருப்பதால்தான் இங்கு விவசாயமும் நன்றாக நடக்கிறது” என்றது அந்த ஆமை.

‘‘ஆமையே, நான்தான் அந்த மன்னன்.

நான் இந்த ஏரியை வெட்டியதாக எனக்கு நினைவில்லையே’’ என்றார் மன்னர்.

‘‘இல்லை மன்னா’’, ஏரி உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் வெட்டப்பட்டது.

அப்போது முதல் இந்த ஏரியில் மட்டும் எப்போதும் தண்ணீர் வற்றுவதே இல்லை.

எனவே, இந்த பகுதியின் செழிப்பிற்கே நீ தான் காரணமாக அமைந்து விட்டாய்.

நானும் பல ஆண்டுகளாக

இந்த ஏரியில் மகிழ்ச்சியாக உயிர் வாழ்கின்றேன்.

இன்னும் பல உயிரினங்கள் இங்கு உயிர் வாழப்போகின்றன” என்றது அந்த ஆமை.

மன்னர் மகிழ்ந்தார். மகிழ்ச்சியுடன் சொர்க்கத்திற்கு

சென்றார். அந்த மன்னனைப் போல்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை மக்களுக்கு செய்த தொலைநோக்குப் பார்வையுடன் செய்த நல்ல

காரியங்களின் பலன் பல தலைமுறைகளுக்கும்
பயன்படும். அப்படிப்பட்ட திட்டங்களைத்தான்
அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.
இந்த அரசு மக்கள் அரசு!
இந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு!

விவேகத்துடன் விரைந்து செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை அம்மாவினுடைய அரசால் தொடர்ந்து இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இன்றைக்கு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு செயல்படுத்துகின்றது. இன்றைக்கு, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களிலே சேமித்து வைப்பதற்காக குடிமராமத்து என்கிற ஒரு அற்புதமான திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். முதல்கட்டமாக அதற்கு ரூ.100 கோடி ஒதுக்கி பரிட்சார்த்த முறையிலே 1519 ஏரிகளை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு அந்த ஏரிகளையெல்லாம் ஆழப்படுத்தினோம். கடந்த காலங்களிலே பெய்த மழைநீர் அந்த ஏரிகளில் நிரம்பியிருக்கிறது. இன்றைக்கு விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது, குடிநீருக்கு தேவையான நீரும் கிடைக்கின்றது, நிலத்தடி நீரும் உயர்ந்திருக்கின்றது. ஆகவே, குடிமராமத்து திட்டம் ஒரு அற்புதமான திட்டம். ஆகவே, இந்த திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள், அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மீண்டும் இந்தத் திட்டம் விரிவுபடுத்துவதற்காக 1511 ஏரிகள் இன்றைக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் திட்டத்திற்காக 331 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கிராமத்திலே வாழ்கின்ற ஏழை,

எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட விவசாய, விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், அவர்கள் வளம் பெறவேண்டும் என்று சொன்னால், நீர் மிக முக்கியம், அந்த நீரை சேமிப்பதற்காக அம்மாவினுடைய அரசு திட்டமிட்டு, இன்றைக்கு இந்த திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல. ஆங்காங்கே இருக்கின்ற ஓடைகள், நதிகள் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று கோரிக்கைகள் வந்தன. அந்த கோரிக்கைகளை ஏற்று, மூன்றாண்டு கால திட்டமாக இந்த திட்டத்தை உருவாக்கி 1000 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கி, அந்த மூன்றாண்டு காலத்திலே, ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கீடு செய்து, குறிப்பிட்ட அளவு தடுப்பணை கட்ட அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, முதல் கட்டமாக 350 கோடி ரூபாய் தடுப்பணை கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. பருவமழை பெய்கின்ற காலங்களிலே, பெய்கின்ற நீர் ஓடையின் வழியாக, நதியின் வழியாக கடலில் சென்று வீணாகின்றது. ஆகவே, அந்த நீரை ஆங்காங்கே தடுப்பணை கட்டப்பட்டு, அந்த நீர் சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீரை உயரச் செய்து, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. அந்தத் திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு சொட்டு நீர் கூட வீணாகக் கூடாது. அந்த நீரை எப்படியெல்லாம் சேமித்து வைக்கவேண்டும் என்று அரசு திட்டமிட்டு இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கிராமம், கிராமத்திலே இருக்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இரவென்றும், பகலென்றும் பாராமல் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு ரத்தத்தை மண்ணிலே சிந்தி உழைக்கின்ற விவசாயிகளுக்கு தேவையான நீரை கொடுப்பதுதான் அம்மாவினுடைய அரசினுடைய முதல் கடமை என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக, உளுந்து பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக, அரசாங்கமே உளுந்தை கொள்முதல் செய்கின்றது. சந்தை விலையைவிட அதிக விலை கொடுத்து உளுந்தை அம்மாவினுடைய அரசே கொள்முதல் செய்கின்றது. சந்தை விலை ரூபாய் 45 என்றால், அரசாங்கம் ரூபாய் 54 கொடுக்கின்ற காரணத்தினால் விவசாயிகள் பயனடைகின்றனர். இப்படிப்பட்ட நிலை உருவாக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு, இதற்காக 3000 டன் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை 250 டன் உளுந்து விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, விவசாயிகள் பாதிக்கப்படுகின்றபொழுதெல்லாம், அவர்களின் நஷ்டத்தை அரசே ஏற்று, விவசாயிகளை காப்பாற்றுகின்ற அரசாக அம்மாவினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

சில இடங்களில், விவசாயிகள், கிட்டத்தட்ட 1000 அடி வரை ஆழ்துளை குழாய் அமைத்தால்தான் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலையிருப்பதினால், கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல், சிக்கனமாக பயன்படுத்துவதற்காக அம்மாவினுடைய அரசு சொட்டுநீர் பாசனத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற 75 சதவிகித மானியத்தின் மூலமாக சொட்டுநீர் பாசன கருவிகளை பெற்று அதை பயன்படுத்தி வேளாண் தொழிலை மேற்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, விவசாயிகளுக்கு தேவையான வேளாண் கருவிகள் வாங்குவதற்கு அம்மா அரசு மானியம் கொடுக்கின்றது. விதைகள், உரம் வாங்க மானியம் கொடுக்கின்றது. இந்தியாவிலேயே கிட்டத்தட்ட 3–4 ஆண்டு காலமாக இந்தியாவிலேயே அதிக உணவு தானிய உற்பத்தியை பெருக்கி முதல்

பரிசை பெற்ற மாநிலம் நம் தமிழ்நாடு. அதற்காக கிருஷிகர்மாண் என்ற விருதையும் நாம் பெற்றிருக்கின்றோம். இன்றைக்கு விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்கின்ற காரணத்தினாலே, அதிக அளவு உற்பத்தியை தமிழகத்திலே காண முடிகின்றது, இன்றைக்கு வேளாண் பெருமக்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதேபோல, விலையில்லா அரிசி கொடுக்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல கல்வியில், மாணவ சமுதாயம் அதிக அளவில் படிக்க வேண்டுமென்பதற்காக, அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலும், இன்றைக்கு அம்மாவினுடைய அரசும் ஆங்காங்கே 11 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை திறந்திருக்கின்றது. இதன்வாயிலாக, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கிராமத்திலே வாழ்கின்ற ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள்கூட உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். 2011–ல் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்கின்றபொழுது, 100க்கு 21 சதவிகிதம்தான் உயர்கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை இருந்தது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கல்வியிலே புரட்சி செய்து, படிக்கின்ற மாணவர்களுக்கு காலணி, விலையில்லா நோட்டுப் புத்தகம், பை, சைக்கிள் மற்றும் அறிவுப்பூர்வமான கல்வி பெறுவதற்கு மடிக்கணினி போன்ற ஏராளமான நலத்திட்ட உதவிகள் செய்ததன் விளைவாக, இன்றைக்கு இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 46.34 சதவிகிதம் உயர்ந்திருக்கின்றது என்ற பெருமையை அம்மாவினுடைய அரசு கொடுத்திருக்கின்றது. எந்தவொரு மாநிலம் கல்வியில் சிறக்கின்றதோ, அந்த மாநிலம் அனைத்திலும் வளம் கொழிக்கும். பண்பு, ஒழுக்கம், அன்பு என அனைத்தும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் கல்வி கிடைக்க வேண்டும். அப்படிப்பட்ட கல்வியை நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு அம்மாவினுடைய அரசு

கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஒரு நாடு வளம்பெற வேண்டுமென்றால் கல்வி மிக முக்கியம் என்ற காரணத்தினால்தான், மற்ற துறைகளைக் காட்டிலும், கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கக்கூடிய விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளை உள்ளடக்கிய 246 குடியிருப்புகளுக்கு, ரூபாய் 106 கோடி மதிப்பீட்டில் இன்னொரு கூட்டுக் குடிநீர் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கி தரப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் இன்னும் 6 மாதகாலத்தில் நிறைவடைய வேண்டிய நிலையில் உள்ளது. ஆகவே, அம்மாவினுடைய அரசு தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி தண்ணீரை வழங்க, அம்மாவினால் அடிக்கல் நாட்டப்பட்டு, இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. குடிப்பதற்கு நீர் மிக முக்கியம். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய கூட்டுக் குடிநீர் திட்டம் மிக வேகமாக விரைந்து செயல்படுத்தப்பட்டு, முடிக்கப்பட்டு, முதலில் கோவில்பட்டியில் திறந்திருக்கின்றோம். இன்னும் 6 மாதகாலத்தில் ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கும் தங்குதடையில்லாத பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி குடிநீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் விருதுநகர் மாவட்ட மக்களுக்கும் தங்குதடையில்லாத பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி குடிநீர் வழங்கவேண்டுமென்பதற்காக விருதுநகரின் மூன்று தொகுதிகளில் உருவாக்கப்பட்ட திட்டமும், குறுகிய காலத்தில் முடிவு பெற்று துவக்கி வைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இத்தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, தூத்துக்குடி நகரத்திலும் ரூபாய் 292 கோடி மதிப்பீட்டில், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழாவிலே,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் முடிவுற்று இன்றைக்கு தூத்துக்குடி நகராட்சியில் வாழும் மக்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு தண்ணீர் வழங்கக்கூடிய ஒரு நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் மூலமாக, பணிகளுக்கு செல்கின்ற, அமைப்புசாரா பணியில் இருக்கின்ற பெண்களுக்கும், குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கும், வீட்டிற்கும் செல்வதற்கு, மானிய விலையில் இருசக்கர வாகனம் கொடுக்கின்றோம். ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் இருசக்கர வாகனம் கொடுப்பதற்கு, அதிகபட்சமாக ரூபாய் 25 ஆயிரம் மானியம் அரசு கொடுக்கின்றது. இத்திட்டத்தில் இதுவரை பதிவு செய்துள்ள 3,34,000 நபர்களுக்கும் இன்னும் இரண்டாண்டு காலத்திலே இருசக்கர வாகனம் கொடுத்து, அந்த திட்டம் அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலை அம்மாவினுடைய ஆட்சியில்தான் பெண்களுக்குக் கிடைத்திருக்கின்றது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மருத்துவத்துறை சிறந்த முறையில் விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்றையதினம், 2011–ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதற்குப் பிறகு கிராமப்புற மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக 229 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தியாவில் இவ்வளவு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எந்த மாநிலத்திலும் திறக்கப்படவில்லை, தமிழகத்தில் தான் திறக்கப்பட்டிருக்கின்றது. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை கொண்ட மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு, 120க்கும் மேற்பட்ட மருத்துவமனையும் அம்மாவினுடைய அரசால் தான் திறக்கப்பட்டிருக்கின்றது. ஆங்காங்கே கிராமத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் பயன்பெற வேண்டும்

என்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டு, அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழைகளுக்கு அங்கேயே சிகிச்சை பெற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு தான் இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றது.

இன்றைக்கு ஸ்டான்லி மருத்துவமனையில், நம்முடைய அரசு டாக்டர்கள் குழுவின் கடும் முயற்சியால், திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த இரண்டு கைகளும் இல்லாத ஒருவருக்கு இரண்டு கைகள் பொருத்தப்பட்டு, அவர் நலமாக இருக்கின்றார். அப்படிப்பட்ட சாதனையை நம்முடைய மருத்துவத் துறை படைத்திருக்கின்றது. இந்திய வரலாற்றிலேயே, அரசு மருத்துவமனையில் இப்படி இரண்டு கைகளும் பொருத்தப்பட்ட வரலாறு, தமிழகத்தில் இருக்கின்ற டாக்டர்கள் செய்திருக்கிறார்கள். அந்த மருத்துவ குழுவில் இருந்த டாக்டர்களுக்கும், அந்த குழுவை சேர்ந்தவர்களுக்கும் இந்த நேரத்தில் வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, மதுரையில் இருதய மாற்று அறுவை சிகிச்சை அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு அரசு மருத்துவமனை நாட்டு மக்களுக்கு நாட்டு மக்களுக்குத் தேவையான நன்மைகள் செய்கின்ற ஒரு மருத்துவமனையாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இன்றைக்கு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையிலே இந்தியாவிலேயே தொடர்ந்து மூன்றாண்டு காலம் முதலிடத்தில் வகித்துக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைக்கு மருத்துவ சிசிச்சை அளவிலே இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இன்றைக்கு பிறக்கின்ற குழந்தைகளின் இறப்பு சதவிகிதம் குறைந்திருக்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தபொழுது, குழந்தைகள் ஊட்டத்தோடு பிறக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கை எடுத்தார்கள். 2014 தேர்தல் அறிக்கையிலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நான்

ஆட்சிக்கு வந்தவுடன் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொடுக்கப்படுகின்ற 12000 ரூபாய் 18000 ரூபாயாக உயர்த்தப்படும் என்று சொன்னார்கள். அதனடிப்படையிலே இன்றைக்கு 18000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதில் ரூ.4000—ஐ பிரித்து இரண்டு கட்டமாக, அம்மா தாய்சேய் நல பெட்டகம் என்ற ஒரு அருமையான திட்டத்தை வகுத்து அதிலே பேரிச்சம்பழம், ஆரஞ்சு போன்ற பொருட்கள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மூன்று மாதத்தில் கொடுக்கிறோம், 5 மாதத்தில் கொடுக்கிறோம். ஆகவே, அந்த பெட்டகத்தில் உள்ள பொருட்களை தாய்மார்கள் எடுத்துக்கொள்ளும்பொழுது அந்தக் குழந்தைகளின் எடை அதிகமாகின்றது, ஆகவே, பிறக்கின்ற குழந்தைகளெல்லலாம் சத்தோடு, அதிக எடையுடன் பிறக்கின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம். உள்ளது சூழ்நிலை இன்று உருவாகியிருக்கிறது குழந்தையின் எடை அதிகமாகிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னென்ன எண்ணினார்களோ அதையெல்லாம் இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ளை தாய்மார்கள் முறை கொடுக்கின்றோம்.

ஜல்லிக்கட்டு இன்றைக்கு அருமையாக நடந்து கொண்டிருக்கின்றது. மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சரும் நானும் இங்கே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் எல்லாம் துவக்கி வைத்தோம். இன்றைக்கு நம்முடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழகத்திலே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு அம்மாவினுடைய அரசுதான் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. அதேபோல இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்திலே பல்வேறு சாலைகள் சீரமைத்து கொண்டு இருக்கின்றோம். எட்டையபுரம், கோவில்பட்டி 17 கிலோ மீட்டர் டிஎன்ஆர்சியில் எடுத்து கொள்ளப்பட்டு சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, டிடிகே, தூத்துக்குடி, திருச்செந்தூர், கன்னியாகுமரி வரை 127 கிலோ மீட்டர் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த

பணிகள் எல்லாம் முடிவுறும் தருவாயில் உள்ளன. அதுமட்டுமல்ல, பல்வேறு சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தரமான சாலை, இன்றைக்கு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இங்கு தரமான சாலைகள் தமிழ்நாட்டிலே போடப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கு எங்கு எல்லாம் பாலங்கள் வேண்டுமோ, அங்கே எல்லாம் பாலப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சி பொற்கால ஆட்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னென்ன கனவுகள் கண்டார்களோ அதை எல்லாம் இன்றைக்கு அம்மாவுடைய அரசு இன்றைக்கு நனவாக்கி கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இது உங்களுடைய அரசு, இது மக்களுடைய அரசு, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து செயல்படுகின்ற அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டி இன்னும் பல பேர் புதுசு புதுசாக ஆரம்பித்து விட்டார்கள். இன்றைக்கு புதிய புதிய கட்சிகள் எல்லாம் இங்கே துவக்கியுள்ளார்கள். புதிய கட்சிகள் துவங்குவது குறித்து வேறுபட்ட கருத்து எங்களுக்கு கிடையாது. ஆனால் இதுநாள் வரை என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இன்றைக்கு நதிகள் எல்லாம் இணைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். காலம் போன காலத்தில் நதிகளை இணைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டத்தை நடத்தி, அது முடிகின்ற தருவாயிலே இப்போது புதிதாக பல தலைவர்கள் முளைத்து சொல்லி கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். அதிமுக அரசு வேறு எந்த கட்சியும் கிடையாது.

இன்றைக்கு பல்வேறு எதிர்கட்சிகள் எல்லாம், இந்த அரசு மீது குற்றம் சுமத்துகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசை பொறுத்தவரை இன்றைக்கு நேர்மையான அரசாக நடைபெற்று கொண்டிருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை துல்லியமாக செயல்படுத்தி கொண்டிருக்கின்றோம். அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்றிருக்கிறோம். இந்திய அளவிலே எடுத்துக் கொண்டால், இன்றைக்கு போக்குவரத்து துறையாக இருந்தாலும் அதற்கு தேவையான பரிசை பெறுகின்றோம். மின்சார துறையாக இருந்தாலும் அதற்கு தேவையான பரிசை பெறுகின்றோம். வேளாண்மை துறையாக இருந்தாலும் இந்தியாவிலே பரிசை பெறுகின்றோம். ஆகவே, எல்லா துறைகளிலும் இன்றைக்கு முன்னோடி துறையாக விளங்கி கொண்டிருக்கிறது. மருத்துவ துறையாக இருந்தாலும் இந்தியாவிலே முதல் பரிசு பெறுகின்றோம். கல்வியிலும் முதல் பரிசு. ஆக எல்லா துறைகளுமே இன்றைக்கு சிறப்பாக விளங்கிடும் அரசாக அம்மாவுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டுக்காக உழைத்தவர். எனக்கு முன்னாலே, மாண்புமிகு அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் சொன்னது போல, எனக்கு பின்னாலும் நூறாண்டு காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அதிகாரத்தில் இருந்து, இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை கொடுக்கும் என்ற வாக்குறுதி தந்தார்கள்.

அதன் அடிப்படையிலே இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, கிராமத்திலே வாழ்கின்ற ஏழைகள் கூட உயர்நிலைக்கு உருவாவதற்கு அனைத்து திட்டங்களையும் வகுத்து, அதை உங்கள் இல்லம் போய் சேருகின்ற அளவிற்கு நடைமுறைப்படுத்துகின்ற அரசாக திகழும் திகழும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அருமை சகோதரர் இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு

அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து, அவரோடு இணைந்து பணியாற்றிய நிர்வாகிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கும், வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**